| | | |
|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | 27/04/2024 | முதல் | 01/05/2024 |
| அறிக்கை எண் : | 034/ 2024 | வெளியீட்டு நாள் : | 26/04/2024 | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 40°-41° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (21.04.2024 முதல் 25.04.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 01-05-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21/04 | 22/04 | 23/04 | 24/04 | 25/04 | தேதி | நாள்-1 27/04 | நாள்-2 28/04 | நாள்-3 29/04 | நாள்-4 30/04 | நாள்-5 01/05 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 41 | 40 | 41 | 40 | 40 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 40 | 41 | 41 | 42 | 42 |
| 27 | 27 | 27 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 28 | 28 | 28 | 27 |
| 4 | 3 | 3 | 3 | 1 | மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 6 | 2 | 6 | 4 |
| 74 | 62 | 61 | 81 | 66 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 44 | 43 | 51 | 39 | 40 | | 20 | 20 | 20 | 20 | 20 |
| 8 | 11 | 15 | 9 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 10 | 8 | 8 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தெற்கு |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 40°-42° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 27° - 28° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு மற்றும் தெற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

அதிக அதிகபட்ச வெப்பநிலை மற்றும் மிதமான காற்று காரணமாக ஏற்படக் கூடிய ஈரப்பத இழப்பினை ஈடுசெய்ய பயிர்களுக்கு அதிக அளவில் நீர் பாசனத்தினை மேற்கொள்ளவும்.

**கால்நடை வளர்ப்பு :**
பகல் பொழுதில் காணப்படும் அதிக வெப்பத்தின் காரணமாக ஆடு, மாடுகள் செயற்கை கருத்தரிப்பினை காலையில் 9 மணிக்குள் அல்லது மாலை 4 மணிக்கு பிறகு செய்ய வேண்டும்.

கால்நடை வளர்ப்போர் பகல் நேரங்களில் 30-60 நிமிட இடைவெளியில் 1 முதல் 5 நிமிடங்களுக்கு விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில் (ஓரங்களில்) ஈரமான சணல் சாக்குபைகளை கட்டி விடவும். தாதுக்களுக்கான அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெப்பமான காலநிலையின் போது விலங்குகளுக்கு அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**விவசாயம் :**
பயறு வகைகள், காய்கறிப் பயிர்கள் மற்றும் நிலக்கடலை பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் தென்படும் இதனை கட்டுப்படுத்த 5% வேப்பங்கொட்டை கரைசல் தெளிக்கலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : எலுமிச்சை, திராட்சை, கால்நடை.**

**எலுமிச்சை:**
எலுமிச்சையில் காய் பிடிப்பு அதிகமாவதற்கு 10 லிட்டர் தண்ணீருக்கு 10 மில்லி என்ற அளவில் இசாபியான் மருந்து அல்லது 10லிட்டர் தண்ணீருக்கு 10கிராம் என்ற அளவில் அமினோ அமிலத்தை கலந்து, பூக்கும் தருணத்தில் தெளிக்கவும். காய்கள் உதிராமல் இருக்க என்.ஏ.ஏ ( நாப்தளின் அசிடிக் ஆசிட் ) வினை 30 பி.பி.எம் என்ற அளவில் கலந்து காய்கள் கோலிக்குண்டு அளவு இருக்கும் போது தெளிக்க வேண்டும்.

**திராட்சை:**
நிலவும் அதிக வெப்பமான வானிலையின் காரணமாக திராட்சை பயிரில் மாவுப்பூச்சியின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகை பூச்சியின் தாக்குதலால் பழங்கள் முதிர்வதற்கு முன்பே உதிர்ந்து விடும்.

சேதமடைந்த கொடியின் பட்டைகள், இலைகள், கொம்புகள், தண்டுகளை சேகரித்து அழிக்க வேண்டும். பழங்களை தாங்கியுள்ள கிளைகளில் ஒட்டுப்பசை அட்டையை கட்டி வைக்கவும்.

மேலும் இரைவிழுங்கியான கிரிப்டோலேமஸ் மான்ட்ரோஜெர்ரி வண்டுகளை ஒரு கொடிக்கு 10 என்ற எண்ணிக்கையில் விட்டும் கட்டுப்படுத்தலாம்.

**கால்நடை:**
கால்நடை வளர்க்கும் விவசாயிகள் தங்களின் ஆடுகளுக்கு உருளை மற்றும் நாடப்புழுக்கான குடற்புழு நீக்க மருந்தினை மே - ஜீன் மாதத்தில் அளிக்கலாம். குடற்புழு நீக்க மருந்துகளை அதிகாலை வேளையில் ஆடுகளுக்கு வெறும் வயிற்றில் கொடுக்க வேண்டும்.